ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

மதுரகவி தாசன் இயற்றிய

# வாழி அரங்கம்

வாழி நின் திருநாமம் அடியார் வாழி
வாழி வேதம் தமிழ் செய்த மாறன்
வாழி மூவுலகும் உய்வித்த முனிவன்
வாழி அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே க

தந்தை சொல்லால் தானோர் கானகம் சென்ற
எந்தை எம்பெருமான் அரக்கனை அழித்து, அவன்
தம்பியும் அனுமனும் திருத்தாள் பணிந்து தொழ
முந்தை அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே உ

நந்தன் பாலகனாய் தவழ்ந்து தயங்கினையோ?
முன்னின்று அரக்கனை வெம்போர் செய்து, ஐவர்
தனக்காய் இரதம் உய்த்தும் சோர்ந்தனையோ?
வண்டார் அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே ந

மண்ணானவன் இவனோ? சூழும் விண்ணானவன் இவனோ?
வன்னொளியானவன் இவனோ? தண்ணீரானவன் இவனோ?
தன்னொருவனே அனைத்தும் தானாகியவன் இவனோ?
என்னானவனே! அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே ச

பயன் ஒன்றில்லா என்னை பரிவுடன் ஆட்கொண்ட பெருமான்
தையலாள் வலமார்பினில் உலகுய்ய உதித்த பெருமான்
பொய்யிலாத புனிதன் பாணன்சொல் செவிமடுத்து
மயங்கிய அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே ரு

வேதமாய் வேதத்தின் பொருளாய் வேதியர்க்கமுதனாய்
தூதனாய் தூயவனாய் தூய்மையின் பொருளாய், நிகரில்
சோதியாய் சோதியின் பொருளாய், சோலைசூழ்
தீதிலா அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே சா

அரிஅரனயன் தானொருவனாகி அமரர்கதிபதியாய்
அரிமுகன் அங்கோர் பிள்ளைக்காகி அவுணனைக் கீண்டு
கரியமால் நன்தன் பாலனாகிக் கடுமழை காத்து
விரிபுகழ் அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே எ

தாவி மூவுலகும் திருத்தாளினால் அளந்தானை
காவிரியாள் திருக்கைகளால் தாங்கி மகிழ
பாவினால் அடியாரும் முனிவரும் ஏத்த, புகழ்
மேவிய அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே அ

சூடிக்கொடுத்தாள் பெண்பிள்ளை பூமாலை, வியந்து
பாடிக்கொடுத்தாள் அவளே நற்பாமாலை, ஈரணிந்து
முடிகொண்ட பெருமான் மூவுலகையும் காத்தருள
வடிவுடை அரங்கம் பள்ளி கொண்ட பெருமானே கூ

வியந்து அரங்கம் பள்ளி கொண்ட பெருமானை
வயலோங்கிய காஞ்சியின் அனந்தன் வேங்கடார்யன்
துயில் கொண்டானை துதித்தேத்திய இச்சொல்லை
உயர்ந்தான் பாதம் தனில் உள்ளுருகி வைத்தானே க0